ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1890/12 - 2014 නොවැම්බර් මස 26 වැනි බදාදා - 2014.11.26
*1890/12 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (x).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 62877 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான தொழில் மற்றும் தொழில்நுட்பவியல் ஹொரைசன் கல்லூரி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட எந்தப் பட்டங்களின் சுருக்கீடுகள் இதற்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளில் முறையே தரப்பட்டுள்ளனவோ அந்தப் பட்டங்களின் அளிப்புக்கு இட்டுச் செல்கின்ற உயர்கல்வியை அதன்கண் அபிவிருத்திச் செய்யும் நோக்கத்துக்காக, தொழில் மற்றும் தொழில்நுட்பவியல் ஹொரைசன் கல்லூரி (பிறைவேட்) லிமிட்டெட்டைப் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக அங்கீகரிக்கின்றேன்.*

***அட்டவணை***

*1. (இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொழில் மற்றும் தொழிநுட்பவியல் ஹொரைசன் கல்லூரி (பிறைவேட்) லிமிட்டெட், பட்டமளிக்கும் அந்தஸ்து அளிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவுறுமுன்னர், கீழே தரப்பட்டுள்ளவாறு முறையாகத் திருத்தப்பட்ட அதன் அமைப்பாக விதிகளை குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-*

*(அ) அமைப்பக விதிகளில் உயர்கல்வியை ஒரு குறிக்கோளாகக் குறித்துரைத்தல்;*

*(ஆ) கம்பனியின் தன்னிச்சையான அல்லது தன்னிச்சையல்லாத ஒடுக்குதலுக்கு முன்னர் அத்தகைய ஒடுக்குதல் பற்றிக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அறிவிப்பதற்குப் பொறுப்பேற்றல்.*

*2. நிறுவகமானது பட்டமளிக்கும் அந்தஸ்தை அங்கீகரிப்பதற்காகக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தில் செய்யப்பட்ட எவையேனும் மாற்றங்களை குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. நிறுவகமானது பட்டமளிக்கின்ற அந்தஸ்து வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுறுமுன்னர், பின்வரும் விபரங்களைக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) தகைமைபெற்ற கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாட்டொகுதியினரின் நிலைமைபற்றிய எண்பிப்பு;

(ii) மாணவர்களின் பாடவிளக்க அளிப்பு, பாடப்புத்தகங்கள் மற்றும் கற்றலுக்கான நூல்கள் என்பன கிடைக்கக்கூடியமை பற்றிய எண்பிப்பு.

4. நிறுவகமானது, பட்டமளிக்கின்ற அந்தஸ்து வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவுறுமுன்னர், கல்விமான்களுக்கான ஆராய்ச்சிக் கலாசாரத்தை உருவாக்குகின்ற தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்கின்ற குறிப்பீடு செய்யப்பட்ட சஞ்சிகைகள் முதலியவற்றில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் தொடர்பான சான்றைக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இக்கட்டளையில் "குறித்துரைக்கப்பட்ட அதிகாரி" என்பது, உயர்கல்வி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்று பொருளாகும்.

| நிரல் I<br>பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடுகள் |
|---|---|
| தொழில் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி (மனிதவள முகாமைத்துவம்) | BSC, BM (HRM) |

திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2014, நவெம்பர் 25.

12-356

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.